18th February 1961]

Salt

* 377 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உரத்தில் உப்பு கலப்படம் செய்பவர்களின்மீதும், கள்ள மார்க்கட்டில் அதிக விலைக்கு விற்கக்கூடியவர்கள் மீதும் கடுமை யான தண்டனை விதிக்க சட்டம் கொண்டுவர உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir. Sufficient provisions for the purpose are available under the Fertilizer Control Order, 1957, which is in force in this State.

SRI V. K. KOTHANDARAMAN : கலப்படம் செய்து விற்பனை செய்தாலும் சரி, கள்ள மார்க்கட்டிலே விற்பனை செய்தாலும் சரி, அவை பற்றிய பல கேஸ்கள் பிடித்துக் கொடுக்கப்பட்டிருக் கின்றன ; கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்பொழுதிருக்கும் சட்டப்படி கேஸ் போட முடியாத நிலைமை இருக்கிறது. அப்படியே தப்பித் தவறி கேஸ் போட்டாலும், ஐந்து ரூபாய், பத்து ரூபாய்க்கு மேலே அபராதம் விதிக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கடுமை யாக நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அப்படிக் கொண்டுவருவதன் மூலமாகத்தான் கலப் படத்தைத் தடுக்க முடியும், உர விநியோகத்தையும் நல்ல முறையில் நடத்த முடியும் என்பதை அமைச்சர் உணர்ந்து இருந்தும், அதற்கேற்றவாறு கடுமையான நடவடிக்கை எடுக்கக் கூடிய அளவுக்கு சட்டத்தைக் கொண்டுவர ஏன் தயங்குகிறார் என்பதை விளக்குவாரா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நடவடிக்கை எடுத் துக்கொள்ளப்படுவதற்கு இப்பொழுது இருக்கும் சட்டம் போது மானது என்று இந்த அரசாங்கம் கருதுகிறது. நடவடிக்கை எடுக்கும்போது போதிய சாட்சியம் வேண்டியிருக்கிறது. சாட்சி யங்களை நீதிபதிகள் விசாரித்து அவர்களுக்குத் தோன்றிய தண்டனை கொடுக்கிறார்கள்.

SRI R. SRINIVASA IYER : உப்பை உரத்தோடு போட்டு 'அடல்டரேட்' பண்ணியது மாதிரி இந்தக் கேள்வி கேட்கப்பட் டிருக்கிறதே, அம்மாதிரி உப்பை உரத்தோடு கலந்து விற்றதாகக் கேஸ் வந்திருக்கிறதா ? அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட் டிருககிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கேள்வி எப்படி யிருந்தாலும், பல விதமான கலப்படங்கள் ஏற்படுகின்றன. எந்த எந்த விதமான கலப்படம் என்பது பற்றிய விவரம் என்னிடம் இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : வெள்ளை உப்பை உரத்தோடு சேர்த்து திருச்சி ஜில்லாவிலுள்ள அரியலூரில் விற்றதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதுபோல் பல ஜில்லாக்களிலும் விற்பனை செய்ததாக அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது இருக்கும் சட்டப்படி, நீதிபதிகள் மேலே பழியைப் போட்டு, 'இப்படித் தீர்ப்புக் கொடுத்துவிடுகிறார்கள்' என்று சொல்லிவிட்டால் போதாது. இருக்கும் சட்டபடிதான் அவர்கள் குறைந்த தண்டனையாக, ஐந்து ரூபாய், பத்து ரூபாய் என்று போடுகிறார்கள். ஆயிரக்கணக்கான அபராதம் போட்டால் கூட சம்பந்தப்பட்டவர்கள் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் பத்தாயிரக் கணக்காக கள்ள மார்க் கெட்டிலே விற்று லாபம் அடையக்கூடிய காரணத்தால். . . . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் அவர்கள் பிரசங்கம் செய்யக்கூடாது. கேள்வியை மட்டும் கேட்க வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : தண்டனை விதிக்கக்கூடிய அளவுபற்றி ஒரு விதி இருக்கவேண்டும். இதற்கு உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நீதிபதிகள் மீது நான் குற்றம் சாட்டுவதாகக் கனம் அங்கத்தினர் சொல்வது முற்றி லும் தவறானது. நான் அப்படியொன்றும் சொல்லவில்லை. தண்டனை கொடுப்பது பற்றித்தான் சட்டத்தில் இருக்கிறது. தண்டனை இவ்வளவுதான் கொடுக்கவேண்டும், என்று 'மாக்ஸிமம்' சாதாரணமாகப் போடுவதில்லை. 'மினிமம்' தான் போடுவது உண்டு நீதிபதி சில பேருக்கு அபராதம் போடுகிறார். சில பேருக்குச் சிறை தண்டனை கொடுக்கிறார். அபராதம் கட்டா விட்டால் சிறை தண்டனை என்று போடுகிறார். நமக்குத் தோன்று கிறபடியே சட்டம் செய்வது அவ்வளவு முறையாக இருக்காது.

Murder

* 378 *Q.*—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the result of Police investigation in regard to the murder of one Jayalakshmi, on 23rd August 1959 in Irulancheri village, Perambakkam post, Tiruvallur taluk?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The case was treated as undetectable.

SRI S. PAKKIRISAMI PILLAI : அந்தப் பெண்ணின் கணவனே கொலை செய்தான் என்ற புகார் இருந்தும் காணப் படும் நபரை விசாரியாமல் விட்டுவிட்டதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதிலே பரிசீலனை செய்யப்பட்டபோது கிடைத்த சாட்சியங்களை வைத்துக்கொண்டு பப்ளிக் ப்ராசிக்யூடர் அபிப்பிராயம் கோரப்பட்டது. டாக்டர்